


யாழ்/நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் இல:542, (509) வளநகர்,
யோகபுரம் மேற்கை வாழ்விடமாகக் கொண்டவரும் இரு மரபும் தூய
தனிநாயகம் இராமநாதர் மாமுதலிமாரின் வழித்தோன்றலும்
அமரர்.நாகநாதர் தையல்முத்து தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனுமான



அமரர்.

# திரு.நாகநாதர் பொன்னுத்துரை

அவர்களின் நினைவாய் மலரும்

# பொன்மலர்

24.05.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# 31ம் நாள் நினைவேந்தல்...

"இப்பிறப்பில் எம்மை எல்லாம் நற்பிறப்பாய் ஆக்கி வைத்தீர்
எப்பிறப்பில் காண்போம் இனி"

இவ்வுலகில்
1937 • 05 • 25



இறையுலகில்
2018 • 04 • 24

யாழ்/நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் இல:542, (509) வளநகர், யோகபுரம் மேற்கை வாழ்விடமாகக் கொண்டவரும் இரு மரபும் தூய தனிநாயகம் இராமநாதர் மாமுதலியாரின் வழித்தோன்றலும் அமரர்.நாகநாதர் தையல்முத்து தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனுமான

# அமரர்.நாகநாதர் பொன்னுத்துரை

## திதி நிர்ணய வெண்பா

வளர்மதி நவமி திதி திகழும் சித்திரை திங்கள் பதினொன்றில்
வளமோங்கு விளம்பி வருடமதில் பார்போற்றும்
நெடுந்தீவில் உதித்த மாண்புறு மைந்தன் பொன்னுத்துரை
பரமசிவன் பொற்பாதம் சென்ற நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



யாழ்/நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும்
இல:542, (509) வளநகர், யோகபுரம் மேற்கை வாழ்விடமாகக்
கொண்டவரும் இரு மரபும் தூய தனிநாயகம் இராமநாதர்
மாமுதலிமாரின் வழித்தோன்றலும் அமரர்.நாகநாதர் தையல்முத்து
தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனுமான

## அமரர்.

# திரு.நாகநாதர் பொன்னுத்துரை

*அவர்களின் சிவபதப்பேறு குறித்த*

# பொன்மலர்

## 24.05.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

சப்த தீவுகளில் ஒன்றான பார்போற்றும்
பசுந்தீவாம் நெடுந்தீவில் பிறந்து வளர்ந்து
குடும்பத்தலைவனாய் இருந்து வழிகாட்டிய
எங்கள் அன்புத் தெய்வம்
அமரர்.நாகநாதர் பொன்னுத்துரை
உங்கள் கருவுதித்த எங்களது காணிக்கையாய்
"பொன்மலராய்"
சமர்ப்பணம் செய்கின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவமயம்
## தோத்திரப்பாடல்கள்
### திருச்சிற்றம்பலம்
### விநாயகர் வணக்கம்

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானை
காதலாற் கூப்புவர் தம் கை.

### தேவாரம்

எத்தாயார் எத்தந்தை எச்சுற்றத்தார்
எம்மாடு சும்மாடாய் எவர் நல்லார்
செத்தால் வந்துதவுவார் எவருமில்லை
சிறு விறகால் தீமூட்டி செல்லர் நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னி
திருவானைக் காவுடைய செல்வா எந்தன்
அத்தாவுன் பொற்பாதம் அமையப் பெற்றால்
அல்லல் கண்டங் கொண்டடியேன் என் செய்கேனே

### திருவாசகம்

அன்றேயெந்தன் ஆவியும் உடலும்
உடமை எல்லாமும்
குன்றே யனையாய் என்னை ஆட்
கொண்டபோதே கொண்டிலையோ
இன்றோறிடை யூறெனக் குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

சித்தனே! அருளாய்! செங்கணா! அருளாய்!
சிவபுர நகருள் வீற்றிருந்த
அத்தனே! அருளாய்! அமரனே! அருளாய்!
அமரர்கள் அதிபனே! அருளாய்
தத்துநீர்ப் படுகர்த் தண்டலைச் சூழல்
சாட்டியக் குடியுள் ஏழ் இருக்கை
முத்தனே! அருளாய்! முதல்வனே! அருளாய்!
முன்னவா துயர் கெடுத்(து) எனக்கே.

தாட்டரும் பழனப் பைம்பொழிற் படுகர்த்
தண்டலைச் சாட்டியக் குடியார்
ஈட்டிய பொருளாய் இருக்கும் ஏழ் இருக்கை
இருந்தவன் திருவடி மலர்மேல்
காட்டிய பொருட்கலை பயில்கரு ஊரான்
கழறுசொல் மாலைஈர் ஐந்தும்
மாட்டிய சிந்தை மைந்தருக்கு அன்றே
வளரொளி விளங்குவா னுலகே.

## திருப்பல்லாண்டு

தாதையைத் தாளற வீசிய
சண்டிக்கிவ் அண்டத்தொடு முடனே
பூதலத்தோரும் வணங்கப் பொற்
கோயிலும் போனகமுமம் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும்
நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின்
வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
உன்னையென்றும்
மறவாமை வேண்டும் மின்னும் வேண்டும்நான்
மகிழ்ந்து பாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறவாநீ யாடும் போதுன் னடியின்கீ
ழிருக்க வென்றார்.

## திருப்புகழ்

காரணம்ம தாக வந்து புவிமீதே
காலனணு காதி சைந்து கதிகான
நாரணனும் வேத முன்பு தெரியாதே
ஞானநட மேபுரிந்து வருவாயே
ஆரமுத மான தந்தி மணவாளா
ஆறுமுக மாறி ரண்டு விழியோனே
சூரர்களை மாள வென்ற கதிர்வேலா
சோலைமலை மேவு கின்ற பெருமாளே.

## வாழ்த்து

வையம் நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தான்தழைத் தோங்குக
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே.

## திருமந்திரம்

ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுத்திட்டுப்
பேரினை நீக்கி பிணம் என்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடை கொண்டு போய் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நிலைப் பொழிந்தார்களே

## பட்டினத்தடிகள் பாடல்

ஊரும் சதமல்ல வுற்றார் சதமல்ல வுற்றுப் பெற்ற
பேரும் சதமல்ல பெண்டிர் சதமல்ல பிள்ளைகளுஞ்
சீருங் சதமல்ல செல்வஞ் சதமல்ல தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின்றாள் சதங்கச்சியேகம்பனே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர்.
# நாகநாதர் பொன்னுத்துரை
# அவர்களின்
# வாழ்வியல் பக்கங்கள்

பொங்கும் வங்கக்கடல் சூழ்ந்திருக்க, பால்சொரியும் ஆநிரைகள் பசிதீர்க்க, சீர்மருந்து மூலிகைகள் நோய் தீர்க்க, தொன்மை மிகுதானியங்கள் இன்னமுதூட்ட, ஆன்றோரும் சான்றோரும் அறிவூட்ட சப்த தீவுகளில் ஒன்றான பார்போற்றும் பசுந்தீவாம் நெடுந்தீவின் பகலன் உதயமாகும் கீழ்திசைக்கண் உத்தம முதலிமார்கள் வழித்தோற்றலாய் சத்தியம் காக்கும் உயர்சைவ வேளாண் குலமதில் இருமரபும் தூய தனிநாயகம் மாமுதலி இராமநாதர் பழம்பெரும் பதியினரின் பாதத்தடத்தில் ஆலமாவன ஐங்கரன் அருளினால் நாகநாதர் தையல்முத்து தம்பதிகளின் தலைமகனாய் பொன்னுத்துரை அவர்கள் 25.05.1937இல் வந்துதித்தார்.

தளராத துணிவும் தன்னலமற்ற மனமும் கொண்ட இவருக்குத் துணையாக ஐந்து பாசச்சகோதரர்களாக பொன்னம்மா, தெய்வானை, கனகசபை, தவமணி, கனகரத்தினம் ஆகியோர் அணிசேர்க்க தனது கல்வியை நெடுந்தீவு கிழக்கு சுப்பிரமணிய வித்தியாசாலையில் கற்றுத்தேர்ந்தார்.

குறுகுறு என நடந்து சுறுசுறுப்பாய் கோலஎழில் துலங்க ஆலமாவன ஐங்கரன் அருளால் தாய், தந்தை, சகோதரர்கள் எனும் பாசப்பூக்களுடன் பசுந்தீவாம் நெடுந்தீவில் தமது பாரம்பரிய வாழ்விடத்தில் வாழ்ந்துவந்தார். இவ்வாறு வாழ்ந்துவரும் நாளில் இளமைக் காலத்திலேயே இரு சகோதரிகள் இறைவனடி சேர்ந்தமை இவருக்கு சற்று துயரத்தை ஏற்படுத்தியது. எனினும் குன்றாத மனவுறுதியும் விவேகமும் கொண்டு தாய், தந்தையரிற்கு துணையாகவும் சிறந்த சகோதரனாய், உறவுகள், நண்பர்கள் என சிரித்த முகத்துடன் சாந்தமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்து வந்தார்.

இவ்வாறு வாழ்ந்துவரும் நாளில் கல்வியும், களனி நிலவளமும் சீரோங்கும் கிளிநொச்சியின் கல்மடு எனும் செழிப்புமிகு ஊரில் தனது பெற்றோர், சகோதரர்களுடன் 1960இல் குடியேறினார். வற்றாத கனகராயன் ஆறு சூழ்தோடும் நிகரற்ற நீர் வளமும், நெல்வளமும் கொண்ட அக்கிளிநொச்சி மண்ணில் சிறிதுகாலம் வாழ்ந்து வந்தார்.

இவ்வாறு வாழ்ந்துவரும் நாளில் காலக்கடிகாகரம் சுழல்கிறது. மணப்பருவம் அடைகிறார். வழிவழிவந்த மரபு உறவுகளின் வழித் தோன்றலான இருமரபும் தூய உயர்சைவ வேளாண் குலத்தில் வந்துதித்த நெடுந்தீவு மேற்கைச் சேர்ந்த நாகலிங்கம் கனகம்மா தம்பதியினரின் மூன்றாவது இளைய புத்திரி குலமணியுடன் பெற்றோர், உற்றோர், உறவினர்கள் வாழ்த்த இல்லறமெனும் நல்லற பந்தத்தில் 1964இல் இணைந்தார்.

அன்பும், அறனும், நேசிப்பும், நேர்மையும் நிறைந்த பொன்னுத்துரை குலமணி எனும் இவ் இணையரின் இல்வாழ்வில்,

"மங்களம் என்ப மனைமாட்சி மற்று அதன்
நன்கலம் நன்மக்கட்பேறு"

எனும் வள்ளுவர் வாக்கிற்கேற்ப யோகேஸ்வரி, கமலேஸ்வரி, பத்மராஜா, புனிதவதி, சற்குணராஜா எனும் ஐவரையும் தமது பூர்வ புண்ணிய தவப்பயனின் துணையாக பிள்ளைச் செல்வங்களாகப் பெற்று மகிழ்ந்தனர்.

இவ்வாறு வாழ்ந்து வரும் நாளில் பண்டாரவன்னியன் புகழ் நிறைந்த வன்னி நிலத்தின் பற்றுகள் என்றழைக்கப்பட்ட பிரதேசங்களுடன் அரசகுடியேற்றத்திட்டங்கள் உருவாக்கப்பட்டு வளர்ச்சியடையத் தொடங்கிய காலம். இவ்வரச சிந்தனைக்கு வலுச்சேர்க்கும் வகையில், மருதமும், நெய்தலும் முல்லையும் என மூவகை நிலங்களும் நிறைந்து கிடக்கும் வளங்கொழிக்கும் வன்னி மாநிலத்தில் மருதநிலச் சூழல் கொண்ட மல்லாவி மண்ணில் தனது சுயமுயற்சியாலும் விவேகத்தினாலும் தானும் தன் துணைவியுடன் சென்று 542 வளநகர் மல்லாவியில் 1965இல் குடியேறினார்.

"உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பிலைக் கண்டீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழுதுண்டு வேறோர் பணிக்கு"

எனும் ஔவையாரின் அறவாக்கிற்கேற்ப வேளாண் துறையை சிந்தையாய்க் கொண்டு ஈடுபட்டு உறுதியும், சுறுசுறுப்பும், விவேகமும் அமையப்பெற்றவராய் சிறப்புற சுயமுயற்சியுடன் செயலாற்றி உயர்வு பெற்று வந்தார். அதுமட்டுமன்றி புன்னகை பூத்த முகமும் பிறருக்கு உதவுவதில் தலைமகனாயும் சமூகத்தில் நன்மதிப்பு உடைய மனிதராயும் விளங்கியதுடன் பெற்றோர், உடன்பிறப்புகள், உறவினர், நண்பர்களுடனும் இனிதே இணைந்திருந்தார்.

இவ்வாறு வாழ்ந்து வரும் நாளில் தனது வாழ்வைப் போன்று தன்பிள்ளைகள் நலனிலும் அக்கறை கொண்டவராய் பிள்ளைகள் மணப்பருவம் அடைந்ததும் அவர்களிற்கான மணவாழ்வை இனிதே நிறைவேற்றி வைத்தார். அப்பயனாக தனது மூத்த புதல்வி யோகேஸ்வரிக்கு சந்திரகுமாரைத் தேர்ந்தெடுத்து இவர்களின் இல்லற வாழ்வின் சிறப்புப்பயனாக சானுஜன் எனும் பேரனையும் கண்டு மகிழ்ந்தார். இளைய புதல்வி கமலேஸ்வரிக்கு பிள்ளைநாயகம் என்பவரைத் தேர்ந்தெடுத்து மணஞ்செய்து வைத்தார். அவர்களின் இல்வாழ்க்கைச் சிறப்புப் பயனாக பவித்திரன் எனும் பேரக்குழந்தையை கண்டு இன்புற்றார். மூன்றாவது புத்திரன் பத்மராஜாவிற்கு தவரஞ்சினி எனும் பண்புடையாளை கரம்பிடித்துக் கொடுத்து பிரணவன், அகல்யன், டியானா எனும் பேரக்குழந்தைகளைக் கண்டு பூரிப்படைந்திருந்தார். தனது கடைசி மகள் புனிதவதிக்கு பஞ்சபாலசிங்கம் என்பரைத் தேர்ந்தெடுத்து மணஞ்செய்து வைத்தார். இவர்களின் இல்வாழ்வின் சிறப்புப் பயனாக விக்னேஷ், உமேஷன் ஆகியோரை பேரர்களாகப் பெற்று அகமகிழ்ந்தார். தனது செல்ல மகன் சற்குணராஜாவிற்கு யாழினி எனும் அன்புடையாளை கரம்பிடித்துக் கொடுத்து வர்ணிகா, தர்ணிகா எனும் பேரப்பிள்ளைகளைப் பெற்று பெருமகிழ்வடைந்தார். அத்துடன் மட்டும் நின்றுவிடாது தனது பிள்ளைகளின் நலனிற்காக அவர்களை புலம்பெயர் தேசங்களுக்கும் அனுப்பி வைத்தார்.

இந்நிலையில் போர்மேகங்கள் சூழ்கிறது. மக்கள் பல்வேறு பிரதேசங்களிற்கு செல்லலாயினர். அதன்வழி தானும் தனது மனைவி, பேர்த்தியாருடன் 1999இல் மன்னார் சென்று சுமார் பத்து ஆண்டுகள் வசித்து வந்தார். மீண்டும் மக்கள் குடியேறத் தொடங்கிய வேளை 2010இல் திரும்பவும் வளநகர் மல்லாவி வந்து சேர்கிறார். கோரயுத்தத்தால் அபிவிருத்திசார் செயற்பாடுகள் அனைத்தும் ஆரம்பத்தில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்க தானும் இல்லத்தை மீளக்கட்டியெழுப்பியதுடன் தனது விவசாயச் செயற்பாடுகளையும் படிப்படியாக புதுப்பித்து தனது சுயமுயற்சியாலும், விவேகத்தாலும் தனித்து நின்று செயலாற்றினார். அத்துடன் மட்டும் நின்றுவிடாது மல்லாவி திருநகர் பிரதேசத்தில் தனது துணைவியாரின் வழிவந்தோர் ஆதரித்த திருநகர் ஸ்ரீ சுப்பிரமணியர் முருகன்பதியின் மீள் புனருத்தான திருப்பணிக்கு தன்னாலான பங்கை தொடர்ச்சியாக வழங்கி நின்றார்.

இக்காலப்பகுதியிலேயே

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக
மெல்லாம்"

எனும் தெய்வீக வாக்கிற்கேற்ப யோகபுரம் மல்லாவி யோகாம்பிகை சமேத யோகபுர நாதர் சிவன் ஆலய திருப்பணிக்கும் தன் தொண்டை நல்கியிருந்தார்.

இவ்வாறு இல்லறவாழ்வோடு மட்டும் நின்றுவிடாது இறை பணியுடனும் தன்னை இணைத்து அமைதியாக அனைவரும் அகம்மலர வாழ்ந்துவந்தார்.

"தந்தை மகற்காற்றும் பணி அவயத்து
முந்தியிருக்கச்செய்தல்"

என்பதற்கிணங்க தனது பிள்ளைகள், மருமக்கள், பேரக்குழந்தைகள் இன்புற்றிருக்க தனது வாழ்வின் பணிகளை இனிதே நிறைவேற்றி இணைபிரியாத தம்பதியராய் தனது துணைவியுடனும் பேர்த்தியார் சகிதாவுடனும் வாழ்ந்துவரும் காலத்தில் திடீரென நோய்வாய்ப்படுகிறார். மருத்துவ உதவியைப் பெற்றாலும் தனது மனவுறுதியுடனும் பசுந்தீவின் பழமைமிகு பரிகாரங்களாலும் அதிலிருந்து மீண்டு சற்றும் சோராதவராக இன்முகத்துடனும் புன்சிரிப்புடனும் உறவுகள் நண்பர்களுடன் அளவளாவி வாழ்ந்துவந்தார்.

எனினும் மீண்டும் நோயின் தாக்கம் சற்று அதிகரிக்கவே சிறிதுகாலம் அன்னாரின் சுயமுயற்சியால் அமைத்த மற்றுமொரு இல்லமான 509 வளநகர் யோகபுரம் எனுமிடத்தில் வசித்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிலும் அஞ்சாத மனவுறுதி, விடாமுயற்சி, எந்தத்தடைகளையும் வெற்றி பெறும் விவேகம் கொண்ட இவர் இதிலிருந்து மீண்டுவருவார் என எல்லோரும் எண்ணியிருந்தோம். எனினும் 24.04.2018 செவ்வாய்க்கிழமை அன்று தான்நேசித்த மனைவியின் அருகிலேயே பிற்பகல் 1.00 மணியளவில் இவ்வுலக வாழ்வை நீத்து எல்லையில்லாப் பரமனவன் பாதங்களில் இறையடிசேர்ந்தார்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவார்" எனும் வாக்கை விம்மியபடி சொல்லித் தேறுதலடைகிறோம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம்சாந்தி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் தெய்வமே....!

மங்கள நன்நாளில் - என்
கரம் பிடித்து வந்தீரே
வந்த நாள் முதல்
நீர்பாதி நான்பாதி ஆனோமே...!
இல்லறத்தை நல்லறமாக்கும் - இனிய
துணையாக மகிழ்வாய் நாம் வாழ
என்னதவம் செய்தோமோ
இறைவனின் கிருபையால் ஐவரைப்
பெற்றெடுத்து அகமகிழ்ந்திருந்தோமே
இன்பமோ துன்பமோ
இணைந்தே தாங்கினோம்
என் தேவை எவையென்று எனை
ஒன்றும் கேளாமல் அத்தனையும்
உய்த்துணர்ந்து அழுத்தமாய் தந்தவரே
ஐந்து பிள்ளைகளைப் பெற்று
ஐந்தையும் ஐம்பொன்னாக மிளிர வைப்பதற்கு
அரும்பாடு பட்டவரே
தரம் குறையா தங்கத்திற்கு
வந்ததோ சோதனை... என்
தெய்வம் போகும் முன் நான்
போக வேண்டுமென்று வேண்டாத
தெய்வம் இல்லை இனி நான்
என் செய்வேனோ?
படுக்கையில் இருந்தாலும்
பக்கத்தில் இருப்பீர் என்று
பகல் கனவு கண்டேனே...!
நானிருக்க என் தெய்வம்
போனதெங்கே?
அப்பா அப்பா என்று
சுற்றி வந்தேனே?
மணி மணி என்று - என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரம் பற்றி வைத்திருந்தீர்களே
இறுதியில் என் கரம்
பிரிந்து சென்றதேனோ?
பொன்னும் மணியுமாய்
இருந்த எம்மை
பிரிப்பதற்காய் வந்தானோ காலதேவன்
தெய்வமே.... என் தெய்வமே
என்னுள் பாதியை
பிரித்தெடுத்து எங்கு சென்றீர்
என் தெய்வத்தின் பிரிவால்
வாடித் தவிக்கின்றேன்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டி நிற்கும்...

**அன்பு மனைவி**
**பொன்னுத்துரை குலமணி (மணி)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் தாயுமானவரே

சப்த தீவுகளில் ஒன்றான நெடுந்தீவின் மண் தன்னில்
கால் பதித்து வன்னியாம் மல்லாவி மண்ணில்
முழுமதி போல் முக அழகும் சிரிப்பழகும்
மெல்லிய தென்றலது மூங்கில் வழி நுழைந்து
செவியினில் விழுவது போல் தேன் போன்ற
பேச்சழகும் உங்களுடைய சொந்தமென
இறைவன் தந்திருக்க இவ்வுலகை விட்டு
செல்வதற்கு உங்களுக்கு வந்த நேரகாலம்
அறியாமல் நான் தவித்தேன்
அன்பு அப்பாவே உங்கள்
அன்பு முகம் தேடி நிற்கின்றேன்
பொறுமை மிக்க பூமியென வாழ்ந்தீர்கள்
இறைவன் துணை தேடி சென்றதென்ன?
மனம் பொறுக்கவில்லையே
எங்கள் அன்பு அப்பாவே!

குடும்பம் எனும் கோவிலில்
குல விளக்காய் ஒளி பரப்பி
எல்லோரையும் ஆதரித்து
இன்முகம் காட்டி
இன் சொல் பேசி
உலக நியதியை உயிராய் மதித்து
திண்ணிய மனதுடன் பழகுவோர்
உள்ளத்தைக் கவரப் பழகி
பண்புடன் வாழ்ந்து
மண்ணின் வாழ்வு போதும் என்றெண்ணி
விண்ணுலகை எய்திய என் அன்பு அப்பாவே!

என்றும் அன்பிற்கு இலக்கணம்
தந்தவர் நீங்கள் - இன்று
ஏக்கத்தில் ஆழ்த்தி தூக்கத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கு சென்றீர்கள்
என் அன்பு அப்பாவே
வஞ்சம் அற்ற நெஞ்சமென
வானுயர்வில் பெயரெடுத்து - இவ்
வையகம் போற்ற வாழ்ந்த
என் தந்தையே

கடிதெனவே... பிரிவெனும் மூன்றெழுத்தில்
எங்களை மூழ்கடித்து எங்கு சென்றீர்கள்
என் அன்புத் தந்தையே
நீங்கள் மறைந்து போனாலும்
உங்கள் நினைவுகள் எப்போதும்
என்னை விட்டு மறைந்து போகாது
என்றும் அன்பே சிவமாகி
சிவ ஒளியாகுவீர்கள்... அன்பே சிவம்

**என்றும் அன்பு மகள்**
**சந்திரகுமார் யோகேஸ்வரி (சோதி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தூரமதில் உள்ள அன்பு மகள்

அப்பாவின் பிரிவுத்துயரமதில் ஆழ்ந்த கவலையுற்று
அப்பா அப்பா என்று சொல்லி அழுது புரண்டு புலம்புகின்றேனே
உங்கள் பிரிவு தாங்காமல் உருக்குலைந்து போனேனே
இன்னும் பல ஆண்டுகள் என்னுடைய ஆசை அப்பா
இருப்பாரென்று
எண்ணிய கனவுகள் யாவும் மண்ணாகி விட்டதையா
செல்வி என்னைப் பார்க்க வருவாள் என்று
இரவு பகலாக கண்விழித்து காத்திருந்தீர்களே - அப்பா
உம்மை ஏமாற்றி விட்டேன் என்று நினைக்கையில்
என் மனம் குமுறுதப்பா
உங்களுக்கு கொடூர வருத்தம் வந்த போதிலும் நான்கு
பிள்ளைகளும் ஒன்றுகூடி பராமரித்து நிற்கையிலே
நான் மட்டும் உம் அருகாமையை நாடி வரவில்லையேயப்பா...!
இறுதிவரை உமது பொன்முகத்தை காணாத பாவியப்பா நான்
பாவி!
இறுதிக் கிரியையில் அழுது தீர்திருந்தாலும் எனது ஆதங்கம்
ஓரளவு தீர்ந்திருக்கும் அப்பா எங்கேயப்ப்பா சொல்லித் தீர்ப்பேன்
எனது பொன்னரப்பாவை எங்கே இனிப் பார்ப்பேன்.....!
நெடுந்தூரமதில் நான் இருந்து நொறுங்கி அழுதபோது
உறவினர் ஓடிவந்து என் துயரமதைப் பகிர்ந்தனரே
உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

**உமது ஆசிக்காக காத்திருக்கும்**
**அன்பு மகள்**
**கமலேஸ்வரி (செல்வி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு விறகால் தீ மூட்டினேனே

துள்ளித் திரியும் பருவமதில்
தூக்கி வளர்த்தீர்கள்
பள்ளிப் பருவமதில் - பல
கதைகள் சொல்லி
பாசமழை பொழிந்தீர்கள்
நான் புகலிடம் பெறுவதற்காய்
புலம் பெயர் தேசம் அனுப்பி வைத்தீர்கள்

ஆயிரம் மைல்கள் தொலைவினை
நான் அடைந்திருந்தாலும்
அலைபேசியில் உங்கள் குரல் இனிக்க
ஆறுதல் அடைந்தேன்
அடிக்கடி இலங்கை வந்து
உங்கள் மடிமீது தவழ்ந்த - என்
மழலைப் பருவத்தை
மீள உணர்ந்து சென்றேன்

நலமாய் இருப்பீர்கள் என
நம்பியிருந்த வேளை
வான் வழியே வந்த செய்தி
பொய்யாய் போகவே
விம்மியபடி மீண்டும் விமானம் ஏறினேன்
கதறியபடி கட்டி அணைத்து அழுகின்றேன்
கண் திறந்து பாருங்கள் என் அன்பு அப்பாவே!

அன்பெனும் நறுமணம் வீசிய
உங்கள் சந்தன உடலை
எப்படி சிறு விறகால் தீ மூட்டினேனோ...?
இன்று பனி நிறைந்த தேசத்தில் - நான்
நின்றிருந்தாலும் பெரும் தீயாய்
சுடுகின்றது உங்களின் பிரிவுத்துயர்
மீண்டும் பிறப்பெடுத்து முருகன் துணையுடன்
எமது பதி வந்திடுங்கள் என் அப்பாவே

**பாசமுடன் மூத்த மகன்**
**பொன்னுத்துரை பத்மராஜா (அப்பன்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சம் மறக்குமா...

அன்பான அப்பாவே
அன்பின் உறைவிடமே
கடவுள் கொடுத்த வரம் - நீங்கள்
எனக்கு அப்பாவாய் கிடைத்தது
உங்களுடன் இருந்த காலம்
நான் ஒரு சிறுமியே - எனை
தொலைதூரம் அனுப்பி வைத்தீர்கள்
எனது மண வாழ்க்கைக்காய்
அப்பிரிவே தாங்காமல்
கலங்கி நின்ற போது
ஆறுதல் கடிதம் அனுப்பி வைத்தீர்கள் அப்பா
அதைத்தான் என் நெஞ்சம் மறக்குமா?
தொலைதூரம் நானிருந்து
தொலைபேசி அழைத்திட்டால்
கடைசி மகள் வேவி என்று
மகிழ்ந்துரைப்பீர்களே என் அப்பா
இனி இவ்வார்த்தையை எப்போது கேட்பேனோ
அப்பா உங்கள் நிலை அறிந்து
தூரத்தில் நானிருந்து பாசத்தில் வந்தேனே
வந்து உங்கள் நிலை கண்டு
நெஞ்சு பொறுக்கவில்லை
நிலை தடுமாறி நின்றேனே
பக்கத்தில் நான் வந்தும்
பார்க்க முடியாமல் தவித்த தவிப்பினைத்தான்
சொல்லி மாளுமோ!
முடிந்தவரை தேற்றிவிட்டு - நாம்
எல்லோரும் செல்கையில்
நலமாக இருக்கின்றேன்
சுகமாக போய் வாருங்கள் என்று
அனுப்பி வைத்தீர்களே
என் இனிய அப்பாவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசரமாய் கால தேவன்
அழைக்கின்றான் என்று
யாருக்கும் கஸ்டம் வேண்டாம்
என நினைத்து விண்ணுலகம் தான்
சென்றீரோ அன்பின் அப்பாவே!
உங்களின் பிரிவைத் தாங்காமல்
தவிக்கின்றேன் நிறுத்தி வைத்தாலும்
நிற்காத கண்ணீருடன் கதறி அழைக்கின்றேன்
அப்பா வருவார் என்று...!
கண்ணீர் துடைக்க வருவீரோ
கலங்கி நிற்கின்றேன்.

**பிரியமான கடைசி மகள்**
**பஞ்சபாலசிங்கம் புனிதவதி (வேவி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆருயிர் அப்பா....

மறைந்துபோனீர் என்று
நினைக்கத் தோணவில்லை - ஏனெனில்
உங்களை நான் நெஞ்சில் சுமக்கிறேன்
ஆனாலும் வலிக்கிறது என் இதயம்

அப்பா அப்பா என்று
அனுதினமும் நாடி நின்றேன்
இப்போது எனைப் பிரிந்து
விண்ணுலகம் சென்றதேனோ..?

உயிர் தந்து உணர்வளித்தீர்
ஒற்றுமையாய் நாம் வாழ
ஒழுக்கங்கள் பல கற்பித்தீர்
ஊருக்கு உத்தமராய்
உயர்ந்து நின்ற
எங்கள் அப்பாவே

பள்ளிப் பருவத்தில் ஆயிரம் கதை சொன்னீர்கள்
தேவாரம்பல பாடினீர்கள்
கண்ணியமாய் நான்வாழ வழிகள் பல சொன்னீர்கள்
என்னைத் தலை நிமிர்ந்து வாழ வைத்த தெய்வம் நீங்கள்

காற்றெல்லாம் பொன்னர்மூச்சு
ஊரெல்லாம் மகன்பேச்சு
எப்பொழுதும் புன்னகைகாட்டும் பொன்னரப்பாவே
உங்கள் புன்சிரிப்புதான் போனதெங்கே

உங்கள் பிள்ளைகள் நாம்
உலகெங்கும் வாழ்கின்றோம்
தந்தையின் கனிவான முகம் காண
தவிதவித்து ஓடி வந்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லாமல் சென்றதேனோ?
சோகம் எனை வாட்டுகின்றது..
நிறுத்தி வைத்தாலும்
நிற்கா கண்ணீரும்
தடுத்து வைத்தாலும்

தாங்காத உள்ளமுமாய்
ஓடோடி வந்து
ஒருகுரலாய் அழைக்கின்றேன்
எனை வாழ வைத்த தெய்வம்
மீண்டும் வரும் எந்நாளில்

**என்றென்றும் உங்கள் பாசத்திற்காய் ஏங்கும்**
**இளைய மகன்**
**பொ. சற்குணராஜா (குகன்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதில் நின்ற மாமா

மாமா மாவென்று நாங்கள் உங்களை அன்புடன் அழைத்தாலும்
தந்தையின் உருவில் நின்று பாசமழை சொரிந்தீர்கள்
பொன்னுத்துரை என்னும் பெயரிற்கேற்றாற் போல்
பொன்னாய் ஒளிர்ந்தீர்கள்
இயற்கை நியதி இதுவென்று அறிந்திருந்தும்
மாமா நாம் கலங்குகின்றோம்
மாமா உங்கள் நினைவை, உங்கள் உறவை மறக்கவா முடியும் - எம்மால்
வாழ்வில் அனுபவிக்க வேண்டிய நல்லறங்கள் அனைத்தும்
வாழ்ந்து ஆனந்தமாயிருந்தீர்கள்
பாதி வழியில் எம்மைப் பிரிந்தாலும்
உங்கள் பொன்முகத்தை மறக்க முடியவில்லை மாமா
மருமகன்கள் நாமெல்லாம் அனலிடைப்பட்ட
மெழுகுபோல் உருகுகின்றோம்
இறப்பும் பிறப்பும் இறைவனருள், அவன் விரும்பியடியே நடந்தேறும்
இறப்பை எண்ணி எண்ணி ஏங்கி நின்றால் பயனில்லை
அறத்தின் தந்தையே உங்கள் ஆத்மா இறைவன்தாள் சேர்ந்து
இனிதே வாழ துதிக்கின்றோம் உங்களுக்காக

**உங்களது அரவணைப்பால் மாறிய**
**மருமகன்கள் அல்ல மகன்கள்**
**திரு. கு. சந்திரகுமார் (சுவிஸ்)**
**திரு. மு. பிள்ளைநாயகம் (லண்டன்)**
**திரு. மு. பஞ்சபாலசிங்கம் (இத்தாலி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசை மாமா

விழிநீர் கரைந்து வேதனை
நெஞ்சை முட்டுகின்றதே...!
ஓடி ஓடித் திரிந்து உலவிய
இதயம் நிரந்தரமாய் உறங்கியதேனோ...?
விதி முடிந்து போனது கண்டு - எங்கள்
விழிநீர் வற்றா நதியாய் பாய்கின்றது
கதிகலங்கி வலிமிகுந்து
மதிமயங்கிப் போனோம் - நாம்
வழியறியா நிலையில் இங்கே
மயக்கமென ஆனோம் நாம்...
கண்ணீர் சொரிந்து நாங்கள்
கதறி அழுகின்றோம் - கால தேவன்
உங்களை கவர்ந்தது கண்டு.
என் ஆசை மாமாவினை
எப்பிறப்பில் காண்போம் இனி...?

**உங்கள் பாசத்தால் வாடும்**
**ஆசை மருமகள்**
**திருமதி.பத்மராஜா தவறஞ்சினி (ஜேர்மனி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்ன மருமகளின் மனச்சிதறல்கள்

"சொல்லுங்கம்மா" என்னும் வார்த்தை
சொல்லாமல் ஒலிக்கின்றதே மாமா
தொலைபேசி வழியாக
தொலைதூரம் வந்தாலும்
நெருக்கமான உறவு தந்த
உருக்கமான வார்த்தை மாமா
மாமா என்றழைக்க மகத்தான
தந்தை நீங்கள்
மகளாகிப் போனேன் நான் - உங்கள்
மகத்தான உள்ளம் கண்டு.
ஏச்சிருக்கும் பேச்சிருக்கும் எரிந்து விழல்
நித்தமுமிருக்கும் என்ற உலகினிலே
என் மாமா தெய்வமென்றோ
அன்பால் எனை அரவணைத்து பக்குவமாய
நேசித்து தேசமிகு சந்திரனாய்
தெளிவான ஒளி தந்தீர்கள்
காசு தேடும் உலகினிலே - என் மாமா
கண்ணியத்தை அல்லவோ தேடி நின்றீர்கள்
உங்களைப் போன்ற உத்தமரை - என்
வாழ்வின் விடியலுக்காய் தந்தீர்களே..!
ஏன் இன்று எம்மைப் பிரிந்தீர்கள்...?
என்று எம்மை மறந்தீர்கள்...?
ஆத்ம சாந்தி நீங்கள் பெற எல்லாம் வல்ல
இறைவனை நான் பிரார்த்திக்கிறேன்..

**என்றென்றும் உங்கள் அன்பொன்றே போதும்**
**பாசமுள்ள சின்ன மருமகள்**
**திருமதி.சற்குணராஜா யாழினி (லண்டன்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரனின் மனதில் இருந்து....!

தாத்தா நீங்கள் எங்கு சென்றீர்கள்....?
அம்மம்மாவை ஏன் மறந்தீர்கள்....?
எல்லோருக்கும் புத்தி சொல்லுவீர்களே
உங்கள் நினைவில் ஏன் எனை மறந்தீர்கள்..?
பாசமிகு தாத்தா அன்பு நிறைந்த தாத்தா
உங்கள் பொன்னான முகமதனை என்று
நான் இனிக் காண்பேன்....?

பாரினிலே உங்களைப் போல் பண்புள்ள அம்மப்பா
இனி யார்தான் இருப்பாரோ நானறியேன் தாத்தாவே
வெளிநாட்டில் இருந்தாலும் என்றும் நான்
உங்களுடன் கதைக்க மறந்ததேயில்லை
சிறு பிள்ளையாயிருந்த போது என்னைத் தாங்கி
சுவையான கதைகள் சொல்லி பாட்டுக்கள் - பல
பாடி கலகலப்பாய் என்னைச் சிரிக்க வைத்தீர்கள் - அந்த
இன்பமெல்லாம் இன்று உங்களுடன் சொல்லாமல்
சென்றதுவோ...?
கேடு விளைந்ததுவோ கெடுகாலம் வந்ததுவோ
நாடியே எமதர்மராஜன் நல்லுயிரை எடுத்தானோ
வாடி வதங்குகின்றோம் வதனமதைக் காணாமல்
அரற்றி அழுகின்றோம் ஆற்றுவதற்கு யார் வருவார்...?

**உங்கள் பிரிவினால் வாடி வதங்கும்**
**பேரப்பிள்ளை**
**சந்திரகுமார் சானுஜன் (சுவிஸ்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிஞ்சுக்கரம் பிடித்து நடத்திச் சென்ற எனதருமை தாத்தா

அன்பின் உறைவிடமே
பாசத்தின் ஒளிவிளக்கே தாத்தா
எம் குடும்பத்தின் குலவிளக்கே
குன்றாத பொன் மணியே தாத்தா

தாத்தா என்று உங்களை இன்னும்
பலகாலம் அழைக்க முடியாத பாவியானேனே
வழிகின்ற கண்ணீர் சொல்லும் - நம்
உறவின் வலிமை தனை
வாழுகின்ற துளிகள் சொல்லும் - நான்
உங்கள் மீது வைத்த பாசத்தை

கடவுள் கொடுத்த வரமெனக்கு
கிடைக்கவில்லை - ஆனால்
கடவுளே வரமாக கிடைத்தார்
அதையும் புரிந்து கொள்ள தெரியவில்லை எனக்கு

மனதில் எரிமலை தீ பிளம்பாக
வெடிக்கின்றது அடக்கி வைக்க முடியாத
உங்கள் நினைவுகளால்..!
கனவில் கூட நினைக்கவில்லை
காலதேவன் உங்கள் அருகில் இவ்வளவு
சீக்கிரமாய் வருவானென்று

இனி நனவெல்லாம் உங்கள்
நினைவுகளால் தானே நிறைந்திருக்கும்
பெற்றெடுத்த மக்களிலும் பெருமையாகப்
பேணியென்னை வளர்த்தவரே
என்னையும் உங்களுள் ஓர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையாக என்றுமே - நினைத்தீர்களே
உற்ற துயர் துன்பமெல்லாம் துடைத்தென்
உயர்விற்கு வழி வகுத்தவரே
யார் கண் அடி பட்டிருக்கும் எம்மீது
பெரு விருட்சமொன்று பேச்சு
மூச்சில்லாமல் கிடக்கிறது.

வேட உடை ஒப்பனைகளற்ற
உங்கள் சத்திய வாழ்விலே
அம்மம்மாவையும் என்னையும்
அரவணைத்தீர்களே அன்பால்

ஆறாத்துயரங்கள் உங்கள் இரு
விழிகளுள் இருந்தாலும் நெடுநிழல்
பரப்பிய ஆலமரம் போலிருந்தீர்கள்
ஆடிப்போனதையா எம் ஆணிவேர்
மழைநின்ற பின்பு சாரல் போல
உங்களது பிரிவனை ஏற்றுக்கொள்ள
முடியவில்லை என்னால்
அலைகள் ஓய்ந்த பின்பும் அமிழ்ந்து
போய் கிடக்கின்றேன் உங்கள் நினைவால்

எனக்கான கனவுகளை விட
ஏக்கங்களையே அதிகம் சுமந்தீர்கள்
உங்கள் இறக்கைகளிற்குள் தானே
என் உயிர் காத்தீர்கள்
நான் பறக்க சிறகுகள் பல தந்தீர்கள் - அதில்
சிறகடித்து பறந்து திரிந்தேன்
பச்சைக்கிளி போல

இன்று காலவனின் கொடூரமான புயலில்
மாட்டி விட்டது எங்கள் கூடு
பறப்பதற்கு மனமின்றி சிறகொடிந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிட்டாய் இருக்கின்றேன் ஒரு மூலையில்
பிஞ்சுக்கரம் பிடித்து நடத்திச் சென்ற தாத்தா
என்னைத் தனியே தவிக்கவிட்டதுதான் ஏனோ

நான் தூரம் போனால்
உங்களுக்கு நேரம் போவதேயில்லை
பொடியன் எங்க போனவன்...?
எப்ப வருவான்...?
கதைச்சனியா அவனோட என்று
வாய் ஓயாமல் மணியிடம்
கேட்பீர்களே தாத்தா
திரும்பி வரும்வரை தெருவைப்
பார்த்தபடி தேங்கி கிடப்பீர்களே
உங்களைப் போல் என்மேல் பாசம்
வைக்க இனி யாருமே இல்லையே தாத்தா

ஆணுக்கு ஆணாய் பெண்ணுக்கு பெண்ணாய்
எனை வளர்த்த என் ஆருயிர் தாத்தாவே
இறுதியில் என்கையாலே உங்களை
அலங்கரிப்பேன் என்று நினைக்கவில்லையையா
வாய் விட்டு கதறுகின்றேன் விழிநீர்
துடைக்க வருவீர்களா...?

பெற்ற தந்தை போல் என்றும் என்
பெருந்துணையாய் இருந்து விட்டு
இறைவன்தாள் சேர்ந்து விட அவசரம்
தான் ஏன் கொண்டீர்களோ..?
கொடூரமான நோயைத் தந்து காலதேவன்
தான் என்னிடமிருந்து உங்களை
பிரித்தானோ....?

“பெட்டைக்கோழி கூவி விடியுமா”
பேத்தியும் பேத்தியுமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்து "பொன்னுமணி பிருந்தாவனத்தை" நான்
ஆசைப்பட்ட மாதிரி அழகாகக் கட்டி
முடித்து விட்டீர்கள் என கர்வத்துடன்
கூறினீர்களே தாத்தா...
உப்பரிகையில் உங்களை வைத்ததற்கும்
பலன் கிடைக்கவில்லையே நான் என் சேய்வேன்?

இனி எனக்கு துன்பமேயில்லை என்றிருந்தேனே
இப்போது இன்பமேயில்லை என்றாகிவிட்டதுவோ
மேடு பள்ளமெங்கும் எனக்கு முண்டு கொடுத்தீர்களே
காடு கரம்பையெங்கும் உங்கள் கால் பலத்தில்
நடந்தேனே... ஆனால்
இப்போது கனத்த இதயத்துடன்
கண்ணீர் வடிக்கின்றேன்.

இன்னும் காற்று பலமாக வீசிக்கொண்டு
தான் இருக்கின்றது...
நேற்றுப்போல் என்னால் நெஞ்சை
நிமிர்த்த முடியவில்லை இன்று
நீங்கள் இல்லா அருமை எனக்கு
இப்போது தான் புரிகின்றது ... ஆனாலும்
பயனில்லை.... காலம் கடந்து விட்டது.

வானுயர்ந்த விருட்சம் போல - என்
வாழ்வை நிறைத்தீர்கள்
நீயா நானா என்ற போட்டியில்
வென்றது என்னவோ நீங்கள் தான் தாத்தா
வீணாகப் போனதுவோ என் வேண்டுதல்கள்....!

பூமியில் விழுந்தது முதல் இருபத்துஐந்துகள்
வரை உங்கள் நினைவுகள் தானே
என் உயிரெங்கும் நிறைந்திருக்கும்
இதமான உங்கள் நினைவுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி என்னால் இறக்கி வைக்க
முடியும்.....??
அறியாமல் செய்த பிழையையும்
தெரியாமல் செய்த குழப்படிகளையும்
மன்னித்து விடுங்கள் தாத்தா

கண் இமைக்கும் நேரத்துள்
உங்கள் செங்குருதி செயலிழந்து
போனது தான் ஏனோ....??
படுக்கையில வின் வழியே
நீங்கள் செல்ல - உங்ககள்
பொன் விழிகள் சோர்ந்ததுவோ..?

இன்னும் பல ஆண்டுகள் இருப்பீர்கள்
என்றல்லவா நான் பகல் கனவு கண்டேன்
நீங்கள் போகும் போது என்னிடம்
சொல்லக்கூடாது என்னைப் பார்க்க
கூடாது என்று நினைத்து விட்டீர்களோ
என்னவோ.... என்னை மல்லாவிக்கு
அனுப்பிவிட்டு உங்களது ஆவி
போய் விட்டதோ தாத்தா

உம் உருவம் பார்த்து வளர்ந்திட்ட
செல்வியின் பிள்ளை நான்
உயிருள்ள வரையில் என்றென்றும்
உங்களை நான் மறவேன் தாத்தா...!

**உங்களது கைகளில் வளர்ந்திட்ட**
**ஆசைப்பொடியன்**
**செல்வி. M.P.சகிதா (ராகவி)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏங்கித் தவிக்கின்றேன் தாத்தா

அன்புத் தாத்தாவே!
உங்கள் பொன் முகம் - நான்
கண்டதில்லை
உங்களுடன் கொஞ்சி விளையாடும்
பாக்கியம் கூட எனக்கு கிட்டவில்லை
உங்களிடம் எனக்கான - பல
எதிர்பார்ப்புகள் இருந்த போதிலும்
ஏக்கங்களை மட்டும் பரிசாக தந்து
என்னை ஏமாற்றி எங்கு சென்றீர்கள்
என் அன்புத் தாத்தாவே!
நீங்கள் போன வழி மறந்து - எனக்காக
ஒருமுறை திரும்பி வரமாட்டீர்களா...?

**ஏக்கத்துடன் ஏங்கி நிற்கும்**
**பேரன்**
**P.பவித்திரன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு அப்பப்பாவே

மண்ணிலொரு பிறப்பு உண்டடென்றால்
விண்ணடைதல் புதிதல்ல தான் - ஆனாலும்
அப்பப்பா என்றழைத்த
அற்புதத்தை இழந்துவிட்டோம்
சத்தியமாய் நினைக்கவில்லை...
உங்களுடைய மரணம் இவ்வளவு
சீக்கிரத்தில் உண்டென்று!
நீங்கள் வாழ்ந்த காலமெமக்கு
உயர்வு தானப்பப்பா!
பேரும் புகழும் தானப்பப்பா?
புண்ணியரே!
விண்ணுலகில் இருந்து ஆசி வழங்கிடுவீர் எமக்கு
நாம் மண்ணுலகில் உங்கள் நினைவோடு வாழ்ந்திடுவோம்

உங்கள் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கும்
**பேரப்பிள்ளைகள்**
**பிரணவன், அகல்யன், டியானா (ஜேர்மனி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசை அம்மப்பா

அம்மப்பா!
உங்கள் பொன்னான பார்வையிலே
கவலைகள் பல மறந்தோம்
பொன் சிரிப்பினிலே
சிறைபட்டு நாமிருந்தோம்
காலங்கள் ஒவ்வொன்றிலும் - உங்கள்
கம்பீரம் கண்டு வந்தோம்
தேகம் சிலிர்க்கின்றது - உங்கள்
பயணம் கண்டவுடன்

அம்மப்பா என்றழைக்க
ஆசை கொண்டு அழுகின்றோம்
எப்ப நீங்கள் வருவீர்கள் தாத்தா ...?
ஏங்கும் எம்மைத் தேற்ற
விண்ணைத் தாண்டி சென்றீரோ
விடிவெள்ளி ஆவதற்கு
மண்ணில் விழுந்து புரள்கின்றோம் - உங்கள்
பொன்முகம் காண்பதற்கு

ஆசை அம்மப்பாவிற்காக
**பேரப்பிள்ளைகள்**
**விக்னேஷ், உமேசன் (இத்தாலி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் அன்புமுகத்தை மறக்கவே முடியவில்லை

அப்பப்பா....!
நீங்கள் அதிகம் பேசுவதில்லை - ஆனாலும்
எங்களுடன் ஆடினீர்கள் பாடினீர்கள்
முதுகினிலே நாம் ஏற முகம் மலர சிரித்தீர்கள்
சில நாள் தான் உங்களது
சிறகினுள் அணைந்திருந்தோம்
பல நாள் நாம் உங்களுடன் பேசினோம்
தொலைவிலிருந்து அன்பாய் நாம் அழைத்தோமே
பண்பாயும் பேசினீரே...!
சின்னஞ்சிறு குஞ்சுகள் நாம்
இன்றும் இன்னும் அழுகின்றோம்.....
உங்கள் புகழ்பாட எமக்கு
வார்த்தைகள் கோடி கோடி....
இன்னும் நீங்கள் வாழ்ந்திருந்தால்
இவ்வுலகம் எமக்கு சொர்க்கம் தான்
எமதன்பை மறவாது என்றென்றும்
எங்ளை வாழ்துங்கள் அப்பப்பா

**மறக்க முடியா அப்பப்பாவிற்காக**
**பேரப்பிள்ளைகள்**
**வர்ணிகா, தர்ணிகா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்வும் உயிரும் ஒன்றான அண்ணனே!

வானம் கறுத்தது
மேகம் இடியாய் அதிர்ந்தது
எங்கள் வனப்பு மிகு அண்ணன்
வானுலகம் சென்றுவிட்டான்

காய்க்க மறந்த பூக்களானோம்
தாய் தந்தை தொலைந்த இடைவெளியை
இட்டு நிரப்பிய எங்கள் தலைத்தமையனே
துயருற்று இருக்கின்றோம்

நெடுந்தீவில் உங்கள் தடம்
தேடி அலைகையில்
மழையென சொரிகிறது
எங்கள் இருவிழியும்

வன்னி மண்ணில் நீ போன
வழியைப் பார்த்தபடி இருக்கிறோம்
வழிகிறது இன்னும் விழிநீர்

தமையனே நீ தொலைந்து போகவில்லை
என்றும் எங்கள் இதயத்துள்
நீ உயிரோடிருப்பாய்

உன் பிரிவால் துயருற்று இருக்கும்
அண்ணி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுக்கு
ஆறுதல் கூறி ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்
உன் ஆத்மா சாந்தியடைய

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**சகோதரர்கள்**

**தம்பி - கனகசபை,**

**தங்கை - தவமணி,**

**தம்பி - கனகரத்தினம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசமிகு பெரியப்பா

பாரம்பரியத்தின் திறவுகோலாம்
பசுந்தீவின் பேருறவே
எந்நேரமும் அடக்கம், அமைதி
அளவான பேச்சு, பாசம் வீசும்
புன்சிரிப்பு எனும் பொன்னிலும்
பெரிய நகையினை தன்னகத்தே
கொண்ட எங்கள் பெரியப்பாவே

தம்பியுடையான் படைக்கஞ்சான்
என்பார்கள் ஆனால் - அந்நாளில்
அண்ணனான உங்கள் அரவணைப்பும்
அச்சமற்ற தன்மையும் எங்கள்
உறவுகளிற்கு தோழ் கொடுத்ததை
கேள்வியுற்றுப் பெருமையடைந்திருக்கின்றோம் பெரியப்பா

எங்கு நாம் பார்த்தாலும் புன்னகைக்கத் தவறமாட்டார்
எம்வீடு வரும் போது விருப்பமுள்ள
பண்டம் ஏதாவது எப்பொழுதும் வாங்கி வருவார்
சிறு புன்சிரிப்புடன் அதை எமக்குத் தருவார்

பண்டிகை நாட்களில் நிறையப் பலகாரம்
கொண்டு வரும் பழைய நினைவுகள்
இன்றும் பசுமையாய் இருக்கிறது பெரியப்பா

துவிச்சக்கர வண்டியின் பின்னிருக்கையில்
எவ்வளவு தூரமானாலும் உங்கள் மகள் மகவை
அருமையாய் சுமந்து செல்வதை அடிக்கடி பார்த்திருக்கின்றோம்
சிறியவர் மீதும் பாசம் தொடர்பில் பேருணர்வுண்டு
என்பதைப் புரிய வைத்தவர் நீங்கள்
அதனால் தானோ என்னவோ
உங்களை அடக்கம் செய்ய
அடவிவரை வந்திருந்தாள்

உறவெனும் பாலத்தின் துருவேறாத
பெருந்தூணே நீங்கள் இறைவனடி
சேர்ந்தாலும் எங்கள் மனதை விட்டுப்
பிரியப்போவதில்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் பிரிவின் துயரில் இருக்கும்
பெரியம்மாவையும், எம் மூத்த சகோதரர்களையும்
அவர்தம் மகள் மகவுகளையும்
தேற்றும் அருளை கடவுளிடம்
வேண்டி நிற்பதோடு உங்கள் ஆத்மா
சாந்தியடைய ஆலமாவன ஐங்கரனை
வேண்டி நிற்கின்றோம்.

இங்ஙனம்
பெறாமக்கள்
**அரங்கன்,**
**செந்தூரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடன்பிறப்பாய், மைத்துனராய், மாமாவாய்...

உங்கள் பெற்றோரிட்ட நாமத்திற்கேற்ப "பொன்னுத்துரை" என்றால் மீண்டும் சொல்ல நா எழா, அவ்வளவு மரியாதை.

ஏன்! யாவராலும் விரும்பப்பட்டதோடன்றி உறவுக்குள் எமக்கு வழிகாட்டியாகவும் அன்பொடு பண்பு, ஒழுக்கம் மிக்கவராகவும் இப்படித்தான் வாழ வேண்டும் என வழிகாட்டியாய் திகழ்ந்தீர்கள்.

உங்கள் கனிவான பேச்சும், கபடுபாராத நட்பும், மாறாத புன்முறுவலும், நோகாத நடையும், மிடுக்கான தோற்றமும் என்றும் எம் கண்ணை விட்டு அகலாது.

ஆம்!
நன்மையோ தீமையோ உறவுக்குள் பலம் சேர்க்கும் விருட்சமாய் மிளிர்ந்த உம் தன்மையை எப்படி மறப்போம்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு மீண்டும் பிறப்புண்டேல் எம் உறவுக்கு உடன்பிறப்பாய் தோன்றிட வேண்டி நிற்கும்

**கோபால் குடும்பத்தினர்**
**கல்மடு,**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்துனி பவளம் புலம்பல்

பண்பு கூடும் வாழ்வு கண்டு
பசுமை தரும் நினைவு கொண்டு
அன்பும் அறிவும் நிறைந்த வாழ்வில்
அறமும் ஆற்றலும் விளங்க வாழ்ந்தீர்

நேற்று நீர் நடந்த சாலை
இன்று இருள் நிறைந்த வேளை
மனதோடு நாம் கொண்ட கவலை
மாறுமோ தீருமோ இந்த வேளை

வாழ்க்கை என்ற ஒரு பயணத்தில் - சிலர்
வருவார் போவார் உலகத்திலே
சொல்லால் செயலால் இதயத்தில் - சிலர்
வாழ்வார் உள்ளத்திலே

மனதோடு கொண்ட கவலைகள்
மாறாது மறையாது எந்நாளும்
விண்ணோடு சென்று நீர் மறைந்தாலும்
மண்ணோடு மறையாது
உம் நினைவுகள்

**ச.பவளராணி**
**(மைத்துனி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெய்வத்துள் வைக்கப்பட்ட நாகநாதர் பொன்னுத்துரை அவர்களின் வாழ்க்கையின் சில குறிப்பு

இந்துமா சமுத்திரத்தின் முத்து என விளங்கும் இலங்கை நாட்டின் வடபால் யாழ்ப்பாணத்தின் வடமேல் திசையில் அமைந்த பசுந்தீவு என அழைக்கப்படும் நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் 1976ம் ஆண்டிலிருந்து என்னுடன் பழக ஆரம்பித்தார். இவர் என்னைத் தனது சகோதரன், நண்பன் என தனது உயிர் பிரியும் வரை வாழ்ந்து வந்தவர்.

"செயற்கரிய செய்வோர் பெரியோர்". இது வள்ளுவர் வாக்கு. அதற்கிணங்க இவர் ஒரு சிறந்த விவசாயி, கமவிதானை, அத்துடன் திருநகர் அருள்மிகு சுப்பிரமணியர் சுவாமி மீது அடங்காத பக்தி பற்றுக் கொண்ட செயல்வீரன். இவர் தேவாரம், திருவாசகம் ஓதும் போது வெண்கல ஒலிச்சத்தம் கணீரெனக் கேட்ட வண்ணம் இன்னும் என்மனதில் இருக்கிறது. திருவெம்பாவைக்காலத்தில் பஜனைக் குழுத்தலைவராக இருந்தவர். இக்குழுவில் நானும் ஒருவனாக இருந்தேன். இக்குழுவில் சேகரிக்கப்பட்ட பணத்தில் தற்பொழுது எமது ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலயத்தின் கன்னி மூல கணபதியாக இருக்கம் பிள்ளையார் இவரின் செயல்வடிவத்தில் ஸ்தாபிக்க வழிகோலியவர். அத்துடன் 18 ஏக்கர் அரசகாட்டினில் ஒரு சிறு கொட்டிலில் அமைந்த எமது ஆலயத்தின் பரிபாலன சபைத் தலைவராக 1977ம் ஆண்டு தெரிவானார். அக்காலப்பகுதிச் செயலாளராக நானும், உபதலைவராக திரு.செ.அருணாசலமும், பொருளாளராக திரு.இ.முருகேசம்பிள்ளையும், நயினாதீவு அருணாசலமும், மற்றும் உறுப்பினர்களையும் தன்பால் கவர்ந்து இன்முகத்துடன் தனது செயற்றிட்டங்களை வலியுறுத்தி செயலாற்றலானார்.

அத்தெய்வப்பணிகளின் வரிசையில் ஆலயத்திற்குரிய காணியின் காட்டை வெட்டித் துப்புரவு செய்தல், புதிய ஆலயம் அமைப்பதற்கு நிலையம் எடுத்தல், அதில் அத்திவாரம் இடுதல், திருப்பணி வேலைகளைத் தொடரந்து செய்தல், இதில் மூலஸ்தானம் மூன்றடி உயரம் வரை திருப்பணி வேலையை ஒப்பேற்றி மூன்றாண்டு கடந்த நிலையில் புதிய நிர்வாகத் தெரிவுடன் இவரது பதவிக்காலம் நிறைவு பெற்றது. ஆனாலும் தொடர்ந்து நடந்த திருப்பணி வேலைகளுக்கு பங்களிப்புச் செய்து வந்தார். இவரின் மனைவி குலமணி அவர்களும் இவரிற்குப்பக்க பலமாக இருந்து இவரின் செயற்றிறனிற்கு ஒத்துழைப்பு வழங்கியது இவரின் புண்ணிய பாக்கியம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரிற்கு மூன்று பெண்பிள்ளைகள், இரண்டு ஆண் பிள்ளைகள். இவர்களுக்குக்கு தகுந்த கல்வி கற்பித்து திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்ற முதுமொழிக்கு ஏற்ப வெளிநாடுகளுக்கு அனுப்பி அவர்களுக்கு ஏற்ற திருமணங்கள் செய்து தனது கடமைகளை செவ்வனே செய்து சொற்கேட்கும் பிள்ளைகளைத் தனதாககி வாழ்ந்திருந்தார்.

மேலும் ஏற்கனவே இருந்த தனது திட்டப்படி தற்போதைய ஆலயத்தின் திருப்பணிக்கு கணிசமான நிதியை வழங்கி அதாவது ஆலய தரிசன மண்டபம், வசந்த மண்டபத்தின் முன் கொட்டகை அமைப்பதற்குப் பங்களிப்புச் செய்துள்ளார். அத்துடன் கார்த்திகை மாதப் பூசை உபயகாரர், திருவெம்பாவை, திருவாதிரைப் பூசைப்பங்குபயம், அத்துடன் 1ம் திருவிழா பங்குபயக்காரர் இப்படியான ஒரு பெருமைக்குரியவர், எம்மை விட்டுப்போனமை பேரிழப்பாகும்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய திருநகர் ஸ்ரீ சுப்பிரமணியரை பிரார்த்திக்கிறேன்.

**நண்பன் நா.யோகரத்தினம்**
**அன்றைய செயலாளர் (1977)**
**திருநகர் ஆலய பரிபாலன சபை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருமைத் தோழனுக்காக என் மனதில் உதித்தவை

கானல் நீராய் கணப்பொழுதில் மின்னலாய்
கண்கள் விட்டகல எண்ணம் தான் ஏன் வந்தது...?
அன்பால் பண்பால் நெஞ்சமதில் நிறைந்தீரே
வஞ்சமது இல்லாத வாசனையாய் பூத்தவரே
நெஞ்சமெல்லாம் நிறைந்த உங்கள் நினைவுகளை
கொஞ்சமேனும் மறவாது தவிக்கும் என்மனம்
உங்கள் வாழ்க்கையை வாழ்ந்தது போதுமென்று
நாளும் இவ்வுலகில் நலிந்து சாகாமல்
போதுமிவை யாவுமெனப் போனீரோ...?
இனியவரே உங்கள் உயிரை
இறைவனுக்காய் காணிக்கை தந்தீரோ....!!

**அருமைத் தோழனுக்காய்**
**அன்பில் விளைந்தவை**
**நண்பன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேற்றம்

பிறக்கும் பொழுது கொண்டு வந்ததில்லை
பிறந்து மண்மேல் இறக்கும் பொழுதும்
கொண்டு போவதில்லை பிறக்கும் பொழுது
கொண்டு வந்தாயோ! இறக்கும் பொழுது
கொண்டு பேவாயோ! உடமையும்
நிலைமையும் ஒருவழி நில்லாது.

யாருக்காக சிரித்தாயோ அவரை ஒருவேளை
மறந்து விடலாம் - ஆனால்
யாருக்காக அழுதாயோ அவரை ஒருநாளும்
உன்னால் மறக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை



மலர்வு
25.05.1937

உதிர்வு
24.04.2018

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும்,
05ம் யூனிற், வளநகரை வசிப்பிடமாகவும் கொண்டவரும்,

## அமரர் நாகநாதர் பொன்னுத்துரை

அவர்கள்

கண்கள் பல உமைத்தேட
காணாமல் காலனுடன் சென்றதேனோ
கள்ளமில்லா வெள்ளை மனமும்
புன்னகை பூத்த பொன் முகமும் மறைந்ததேனோ
கண்களெல்லாம் கண்ணீர் பொங்க
கலங்கவிட்டு எங்கு சென்றீர்கள்
அமைதியாய் மரணத் திரையில்
மௌனமாய் மறைந்த தேனோ !!!

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

பிரிவால் துயருறுவோர்
ஆ.புவனேந்திர சர்மா
சுப்பிரமணியர் தேவஸ்தானம்
திருநகர்,மல்லாவி.

26.04.2018

அச்சுப்பதிப்பு-றோயல் பதிப்பகம்.மல்லாவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி



தோற்றம்
25.05.1937

மறைவு
24.04.2018

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும்,
05ம் யூனிற், வளநகரை வசிப்பிடமாகவும் கொண்டவரும்,
எமது ஆலயத்தின் வளர்ச்சிக்கு பங்களிப்பு வழங்கியவரும்,
எமது ஆலயத்தில் நடைபெறும் பூசை உபயகாரருமாகிய

**அமரர் நாகநாதர் பொன்னுத்துரை**

அவர்கள்

சிரித்த முகத்துடனே
சிங்கார மொழி பேசி
எல்லோரது உள்ளங்களிலும்
இடம் பிடித்தீர் காலன்
உங்களை பிரித்த செய்தி கேட்டு
பதை பதைத்து தவிக்கின்றோம்
நம் காதில் கேட்ட செய்தி பொய்யாகாதா.....!

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

பிரிவுத் துயரில்
ஆலய பரிபாலன சபையினர்
அருள்மிகு ஸ்ரீ யோகாம்பிகை சமேத யோகபுரநாதர் ஆலயம்,
அனிஞ்சியன்குளம்,யோகபுரம்,மல்லாவி.

27.04.2018

அச்சுப்பதிப்பு-றோயல் பதிப்பகம்,மல்லாவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளமார்ந்த நன்றிகள்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

அன்பின் அடித்தளமாய் பண்பின் சிகரமாய், பாசத்தின் உறைவிடமாய் திகழ்ந்து எம்மை எல்லாம் வாழ்வாங்கு வாழ வழிகாட்டி எம்மை விட்டு நாம் எதிர்பாராத நிலையில் பிரிந்து அமரத்துவம் அடைந்த எம் அன்புத் தெய்வம் **அமரர்.நாகநாதர் பொன்னுத்துரை** அவர்கள் நோயுற்றிருந்த வேளையில் வந்து உதவியோருக்கும், துயரத்தின் போது வீட்டிற்கு வந்து அன்னாரின் மறைவுத் துயரிலும், இறுதிக்கிரியையிலும், இறுதி ஊர்வலத்திலும் கலந்து கொண்டு ஆறுதல் தந்த அனைவருக்கும் நேரில் கலந்து கொள்ள முடியாத நிலையில் தொலைபேசி ஊடாக துயரினை பகிர்ந்து கொண்ட உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் 24.04.2018ம் திகதியில் இருந்து 27.04.2018ம் திகதி வரை தந்தையாரின் பூத உடல் இலக்கம் 509 வளநகரில் வைத்திருந்த போது தினமும் காலை, மாலை, இரவு வேளைகளில் தேவாரம் பாடி தந்தையின் சந்தன உடலை தெய்வீக சூழலில் வைத்திருந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும்

மலர் வளையங்கள் வைத்து மரியாதை தெரிவித்தோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், துண்டுபிரசுரங்கள், பதாதைகள் வெளியிட்டோருக்கும் உதயன் பத்திரிகையில் செய்தி பிரசுரிக்க உதவியோருக்கும் பூக்கள் மற்றும் பூமாலைகள் தந்து உதவியவர்களுக்கும், இறுதிச்சடங்கு தகவலினை ஒலிபெருக்கி மூலம் தெரிவித்தவர்களுக்கும் இறுதிநாள் இரங்கல் உரை நிகழ்த்தியவர்களுக்கும் சகல வாகன உதவிகள் செய்தவர்களுக்கும்

நாங்கள் செயலற்றவர்களான நின்ற பொழுது குறிப்பறிந்து தங்கள் குடும்ப மரணச்சடங்காக கருதி தேநீர், உணவு வசதிகளை வழங்கியவர்களுக்கும் சகல வகை உதவிகளையும் நல்கிய உற்றார், உறவினர்கள், நண்பர்கள், ஊர் மக்கள் மற்றம் வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு எமக்கு அனுதாபங்களை தெரிவித்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் தந்தையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிச்சடங்கிற்காக பந்தல், ஆசனங்கள், ஒளியூட்டல் சேவைகளை வழங்கிய நெஞ்சங்களுக்கும், இறுதிச்சடங்கில் தந்தையை அழகுற அலங்கரித்த ரசிக்கா மலர்ச்சாலை - வவுனியா பொறுப்பாளர் மற்றும் சக ஊழியர்கள் அனைவருக்கும், தந்தையின் பூ உடலை தகனத்திற்காக செவ்வனே ஏற்றிச் சென்ற ஊர்தி அலங்கரிப்பு பொறுப்பாளருக்கும், இறுதி ஊர்வலத்தினை மேள தாள வாத்தியக்கருவியால் கொட்டு முரசாய் முழங்கிய இசைக்குழுவினருக்கும், தந்தையின் பூவாடை வீசும் சந்தனச்சாரல் தேகத்தை கூட இறுதிவரை நின்று தகனஞ் செய்த அனைத்து நல் உள்ளங்களுக்கும்

அமரர்.கிரியை அந்தியேட்டிக்கிரியை சபிண்டீகரணக் கிரியைகளினை சிறப்பாக மேற்கொண்ட அந்தணர் சிவாச்சாரியார்களுக்கும், அக் கிரியைகளில் கலந்து கொண்டு உதவியோருக்கும் மற்றும் இப் "பொன்மலர்" நூல் தொகுப்பிற்கு மனதில் உள்ள துயர் செய்திகளைத் தந்தோர்க்கும், பொன்மலரினை தொகுப்பதற்கு வழிகோலிய அனைவருக்கும், கீரிமலை புண்ணிய தீர்த்தக்கரையில் அந்தியேட்டிக் கிரியைகளில் பங்குகொண்ட உறவினர்கள், நண்பர்களுக்கும் இன்றைய நிகழ்வில் கலந்து கொண்ட யாவர்க்கும் இப் பொன்மலரினை மிகக்குறுகிய காலத்தில் அச்சிட்டு தந்த அகரம் அச்சகத்தாருக்கும் மேலும் தேவை உணர்ந்து உதவிகளை புரிந்த அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் மற்றும் அப்பாவின் வாழ்நாளில் அவரின் வாழ்க்கை காலங்களில் அவருடன் பயணித்த அனைவருக்கும் எமது உளமார்ந்த அன்பு கலந்த நன்றியறிதலை மிகப் பணிவுடன் சமர்ப்பிக்கின்றோம். மேலும் வேறு யாருக்காவது நன்றி கூற கடமைப்பட்டிருப்பின் அவர்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றியறிதலை மிகப்பணிவுடன் சமர்ப்பிக்கின்றோம்.

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்

# நெடுந்தீவு தனிநாயகம் இராப

நாகநாதர் + தையல்முத்து

- ★பொன்னம்மா
- பொன்னுத்துரை
- ★தெய்வானை
- கனகசபை + புனிதவதி
- தவமணி + ★கோபால்
- கனகரத்தினம் + ★மாங்களேஸ்வரி

யோகேஸ்வரி (சுவிஸ்)
+
சந்திரகுமார்
→ சானுஜன்


கமலேஸ்வரி (லண்டன்)
+
பிள்ளைநாயகம்
→ சகிதா
பவித்திரன்

பத்மராஜா (ஜேர்மன
+
தவரஞ்சினி
→ பிரணவன்
அகல்யன்
டியானா

Digitized by Nool
noolaham.org | a

விருட்சம்

# இராமநாதர் வழித்தேன்றல்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கின்றது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டுவந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு,
எதைநீ எடுத்துக்கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அதுவும் இங்கிருந்தே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள், அது வேறொருவருடையதாகும்.



**இதுவே உலக நியதியும்**
**எனது படைப்பின் சாரம்சமுமாகும்**
**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**

அகரம் பிறின்டேஸ்-024 222 3772

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org